1995 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலிகைச் செடி தமிழகத்திலே எல்லா இடங்களிலும் கிடைக்கிறது. இன்றைக்குக் காலையிலே இந்த மன்றத்திற்கு வருகின்றபோது என்னுடைய வீட்டின் அருகிலேகூட இந்த மூலிகைச் செடி இருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : இந்த ஓரிதழ் தாமரை மூலிகை மூலமாக என்னென்ன பயன்கள் விவசாயிகளுக்குக் கிடைக்கின்றன; இது குறித்து விவசாய ஆராய்ச்சி ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ? அதன் விளைவுகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை விவசாயிகள் பயிரிடுவது இல்லை. இதை மூலிகை மருந்துக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய சிறப்புமிக்க மூலிகை பற்றிய புத்தகத்திலே ஒரு குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செடி தென்காசி, குற்றாலம் ஆகிய மலைப் பகுதிகளில் அதிகமாக உள்ளது. உடலுக்கு அழகு தரும்; அதாவது, வண்ணம் தரக்கூடியது. இச்சையைப் பெருக்கி, உடலை வளமாக்கும். பச்சைக் கற்பூரம், கோரோசனை மற்றும் ஓரிதழ் தாமரை இதழ்களை, பசு வெண்ணையுடன் தேய்த்து வந்தால், மேகவெட்டைப் புண், மண்டைப் புண் ஆகியவை நீங்குமென்றும், ஜுரம், இளைப்பு நோய் இவற்றைப் போக்குமென்றும், பெருத்த உடலைக்கூட சரியாக ஆக்குமென்றும் குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு).

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி, மேற்கொண்டு விவரங்களுக்கு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குக் கேள்வி போடுங்கள். அவர் இன்னும் அதிகமாக விளக்கம் தருவார்.

அடுத்து, வினா எண் 271, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

271—

நெசவாளர் சங்கங்களுக்கு இலாப விகிதத்தினை உயர்த்துதல்.

23960—திருமதி க. பழனியம்மாள் :*

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெசவாளர் சங்கங்களிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்யும்பொழுது நிர்ணயிக்கப்படும் இலாப விகிதத்தினை உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆவன செய்துள்ளது.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நெசவாளர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து, பல நலத் திட்டங்களை அறிவிப்பு செய்திருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில், கைத்தறிச் சங்கங்களுக்குக் கொடுக்கிற இலாப சதவிகிதத்தை அதிகரிப்பதற்காக ஆவன செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது, எத்தனை சதவிகிதம் இலாபம் கொடுக்கப்படுகிறது; அதனை எத்தனை சதவிகிதமாக உயர்த்த அரசு பரிந்துரை செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ பத்தாண்டுக் காலமாக, இதிலே எந்த மாற்றமும் செய்யப்படாமல் இருந்த நிலையில், தேசிய வங்கியினால் அளிக்கப்பட்டு வந்த நடைமுறை மூலதனத்திற்கு, வட்டி விகிதம் கணிசமாக உயர்த்தப்பட்டதால், சங்கங்கள் தொடர்ந்து நஷ்டம் அடைந்து வந்ததால், 1982-இல் வரையறுக்கப்பட்ட இலாப விகிதத்திற்குத் துணி வாங்கி வந்தமையால், மிகவும் நஷ்டம் அடைந்தன. இதிலே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லி, துறைக்கு ஆணையிட்டதன் விளைவாக, இன்றைக்கு 2½ சதவிகிதம் இலாப விகிதம் அதிகரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக, ஜனதா வேட்டிகளுக்கு, 15-3-94-க்கு முன் இலாப சதவிகிதம் 7% ஆக இருந்தது, இன்றைக்கு 9½% ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. காட்டன் ரகங்களுக்கு 12% ஆக இருந்தது, 14½% ஆக உயர்த்தி தரப்பட்டிருக்கிறது. பட்டு ரகங்களுக்கு 10% ஆக இருந்தது, 12½% ஆக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 15-3-1994-லேயிருந்து அமலுக்கு வந்திருக்கிறது.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி சங்கங்களின் மூலம் உற்பத்திச் செய்யப்படுகிற அனைத்து ரகங்களும், 'கோஆப்டெக்ஸ்' மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றவா என்பதையும், அதன்படி இதுவரை எவ்வளவு

1995 ஏப்ரல் 7]

கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், ஒவ்வொரு ரகத்திற்கும் எவ்வளவு லாபம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இர்ரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92-இல், 1,30,60,000 ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 1992-93-இல், 1,27,76,000 ரூபாய்க்கு வந்திருக்கிறது. 1993-94-இல் ரூ. 1,47,11,000-க்கு வாங்கியிருக்கிறோம். 1994-95-இல் ரூ. 1,55,53,000-க்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. நெசவாளர் சங்கங்களின் மூலமாகத்தான் முழுமையாகக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. ஜனதா ரக வேட்டி ரகங்களுக்கு 9.5 சதவிகிதமும், பருத்தி மற்றும் பாலியஸ்டர் ரகங்களுக்கு 14.5 சதவிகிதமும், பட்டு ரகங்களுக்கு 12.5 சதவிகிதமும் இலாபம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 272, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

272—

பனந்தோப்புமயிலில் சத்துணவு மையம் அமைத்தல்.

***35659**—டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதி, அன்னூர் ஊராட்சி ஒன்றியம், அன்னூர் பேரூராட்சி, பனந்தோப்புமயில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் சத்துணவு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று உரைத்திருக்கிறார்கள். அவினாசி தொகுதி என்பது, 80% ஆதிதிராவிடர் மக்கள் வாழக்கூடிய தொகுதி. அன்னூர் ஒன்றியத்தில், பனந்தோப்புமயில் என்ற கிராமத்தில் சுமார் 100 குடும்பங்களும், அதனையொட்டி 40 குடும்பங்களும் வசித்து வருகிறார்கள். சுமார் 125 குழந்தைகள் அங்கே